**சார்பு நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**முன்னிலை:திரு. எஸ். சந்திரசேகர், பி.ஏ., எல்.எல்.பி.,**
**சார்பு நீதிபதி, சங்கரன்கோவில்**

**2022ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 29ம் நாள் புதன்கிழமை**

**இடைநிலை மனு எண்.1/2022**
**இன்**
**அசல் வழக்கு எண்.107/2017**

1. V.P. சீனிராஜ்
2. சுப்பாலட்சுமி . . . மனுதார்கள்/2,3பிரதிவாதிகள்

/எதிர்/

ராதாகிருஷ்ணன் . . . எதிர்மனுதார்/வாதி

இம்மனுவானது கடந்த 27.06.2022ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள். F.X. யூஜின், A. சுரேஷ் ஆகியோர்களும், எதிர்மனுதார் தரப்பில் வழக்கறிஞர் திரு. R.S.S. பிரதாப்ராஜ் அவர்களும் முன்னிலையாகியுள்ள நிலையில், இரு தரப்பு வாதுரைகளை கேட்டறிந்தும், இரு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த நிலையில், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**உ த் த ர வு**

மனுதார்கள் மீது கடந்த 23.08.2017 தேதியில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி மனுதார்களால் இம்மனு உ.வி.மு.ச., கட்டளை 9 விதி 7 மற்றும் பிரிவு 151ன்கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுவின் சுருக்கம்</u>:

பிரதான அசல் வழக்கானது தபசில் சொத்துக்களைப் பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி எதிர்மனுதாரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக கடந்த 23.08.2017ல் வாய்தா ஏற்பட்டிருந்தபோது, வழக்கு குறித்த ஆவணங்கள் மனுதார்களுக்கு முழுமையாக கிடைக்கப்பெறாததால் அன்றைய தினத்தில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது என்றும், ஷை தவறுதல் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், அதனால் அன்றைய தினத்தில் மனுதார்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுவிட்டது என்றும், மேலும் வழக்கில் கண்ட இளவர் 1ம் பிரதிவாதிக்கு நீதிமன்ற காவலர் நியமனம் செய்யப்பட்டு, அவர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு விசாரணை துவங்கப்பட்டு இந்நிர் எதிர்மனுதார் வா.சா.1ஆக முதல்நிலை சாட்சியமளித்துள்ள நிலையில், வழக்கானது ஷையாரின் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில் இவ்வழக்கு குறித்த ஆவணங்கள் தற்போதுதான் முழுமையாக கிடைக்கப்பெற்றதால் இத்துடன் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, மனுதார்கள் மீது கடந்த 23.08.2017 தேதியில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யவேண்டுமென்றும், இல்லையெனில் மனுதார்களுக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. <u>எதிருரையின் சுருக்கம்</u>

மனுதார்களின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதில்லை என்றும், இவ்வழக்கு பற்றிய விபரம் மனுதார்களுக்கு ஆரம்பம் முதலே நன்கு தெரியும் என்றும், மனுதார்களின்பேரில் சங்கரன்கோவில், முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் பல வழக்குகளும், சார்பு நீதிமன்றத்தில் பல மேல்முறையீடுகளும், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் பல வழக்குகளும் நிலுவையில்

இருந்துவந்து இதே வழக்கறிஞரை வைத்து ஷை வழக்குகளை மனுதார்கள் நடத்தி வந்துள்ள நிலையில், மனுதார்கள் வேண்டுமென்றே இந்நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் இருந்துகொண்டுள்ளனர் என்றும், இந்நிர் எதிர்மனுதார் ஒரு மூத்த குடிமகன் என்றும், எதிர்மனுதாரை வீண் அலைக்கழிவு செய்யவேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில்தான் மனுதார்களால் பின்னிணைவாக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மற்றபடி மனுதார்கள் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவைகள் என்றும், எனவே, இம்மனுவை நிறையீட்டு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

4. இம்மனுவில் தீர்வு காணவேண்டிய விஷயம் யாதெனில்,

மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா ? இல்லையா ?

என்பதேயாகும்.

5. இரு தரப்பிலும் யாதொரு சாட்சியங்களோ, சான்றாவணங்களோ முன்னிறுத்தவில்லை. இரு தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

6. <u>தீர்வு</u> :

பிரதான அசல் வழக்கானது தபசில் சொத்துக்களைப் பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி எதிர்மனுதாரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக கடந்த 23.08.2017ல் வாய்தா ஏற்பட்டிருந்தபோது, வழக்கு குறித்த ஆவணங்கள் மனுதார்களுக்கு முழுமையாக கிடைக்கப்பெறாததால் அன்றைய தினத்தில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது என்றும், ஷை தவறுதல்

வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், அதனால் அன்றைய தினத்தில் மனுதார்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுவிட்டது என்றும், மேலும் வழக்கில் கண்ட இளவர் 1ம் பிரதிவாதிக்கு நீதிமன்ற காவலர் நியமனம் செய்யப்பட்டு, அவர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு விசாரணை துவங்கப்பட்டு இந்நிர் எதிர்மனுதார் வா.சா.1ஆக முதல்நிலை சாட்சியமளித்துள்ள நிலையில், வழக்கானது ஷையாரின் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில் இவ்வழக்கு குறித்த ஆவணங்கள் தற்போதுதான் முழுமையாக கிடைக்கப்பெற்றதால் இத்துடன் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, மனுதார்கள் மீது கடந்த 23.08.2017 தேதியில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யவேண்டும் என்றும், இல்லையெனில் மனுதார்களுக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்றும் மனுதார்கள் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது.

7. இவ்வழக்கு பற்றிய விபரம் மனுதார்களுக்கு ஆரம்பம் முதலே நன்கு தெரியும் என்றும், மனுதார்களின்பேரில் சங்கரன்கோவில், முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் பல வழக்குகளும், சார்பு நீதிமன்றத்தில் பல மேல்முறையீடுகளும், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் பல வழக்குகளும் நிலுவையில் இருந்துவந்து இதே வழக்கறிஞரை வைத்து ஷை வழக்குகளை மனுதார்கள் நடத்தி வந்துள்ள நிலையில், மனுதார்கள் வேண்டுமென்றே இந்நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் இருந்துகொண்டுள்ளனர் என்றும், இந்நிர் எதிர்மனுதார் ஒரு மூத்த குடிமகன் என்றும், எதிர்மனுதாரை வீண் அலைக்கழிவு செய்யவேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில்தான் மனுதார்களால் பின்னிணைவாக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் எதிர்மனுதார் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது.

8. வழக்கு கோப்பை பரிசீலிக்கையில், பிரதான அசல் வழக்கானது, எதிர்மனுதாரால் இந்நிர் மனுதார்கள் மற்றும் இளவர் 1ம் பிரதிவாதி மீது தபசில் சொத்தைப் பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், ஷை அசல் வழக்கில் மனுதார்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா ஏற்பட்டிருந்தபோது, மனுதார்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படாததால் 23.08.2017 அன்று மனுதார்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்பின் இளவர் 1ம் பிரதிவாதிக்காக நீதிமன்ற காப்பாளர் நியமிக்கப்பட்டு, எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு, வழக்கில் எதிர்மனுதார் வா.சா.1ஆக முதல்நிலை சாட்சியம் அளித்து, தற்போது வழக்கானது ஷை வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், மனுதார்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9. மனுதார்கள் தங்களது மனுவில், அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக கடந்த 23.08.2017ல் வாய்தா ஏற்பட்டிருந்தபோது, வழக்கு குறித்த ஆவணங்கள் தங்களுக்கு முழுமையாக கிடைக்கப்பெறாததால் அன்றைய தினத்தில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால், வழக்கு சம்பந்தப்பட்ட எந்தெந்த ஆவணங்கள் ஷை தேதியில் தங்களது கைவசம் இல்லை என்பது குறித்தோ அல்லது வழக்கு சம்பந்தப்பட்ட எந்தெந்த ஆவணங்கள் ஷை தேதியில் தங்களது கைவசம் இருந்தது என்பது குறித்தோ மனுதார்கள் தரப்பில் எவ்வித விளக்கமும் இல்லை. ஆனால், எதிர்மனுதார் தரப்பில், மனுதார்கள் வேண்டுமென்றே அசல் வழக்கினை ஒருதலைபட்ச உத்தரவுக்கு விட்டுவிட்டு இந்நிர் எதிர்மனுதாரை அலைக்கழிவு செய்யவேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் தற்போது பின்னிணைவாக இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

10. அசல் வழக்கானது தபசில் சொத்தைப் பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், சொத்தின் உரிமை குறித்து தரப்பினர்களிடையே ஒரு முழுமையான தீர்வு ஏற்படவேண்டுமென்பதை கருத்திற்கொண்டும், அசல் வழக்கில் இளவர் 1ம் பிரதிவாதிக்காக நீதிமன்ற காப்பாளர் நியமனம் செய்யப்பட்டு, 1ம் பிரதிவாதிக்காக எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, அசல் வழக்கில் எழுவினாக்கள் வனையப்பட்டு, வழக்கில் எதிர்மனுதார் வா.சா.1ஆக முதல்நிலை சாட்சியம் அளித்து, தற்போது வழக்கானது ஷை வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், மனுதார்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும், மனுவுடன் பிரதான அசல் வழக்கிற்கான எதிர்வழக்குரையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதை கருத்திற்கொண்டும், மனுதார்களுக்கு தங்கள் தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய ஒரு வாய்ப்பு வழங்குவதுதான் நீதியின்பாற் உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

11. ஆனால், அதே சமயம் எதிர்மனுதார் எதிருரையில் குறிப்பிட்டுள்ளதுபோல், மனுதார்கள் இம்மனுவை பின்னிணைவாக தாக்கல் செய்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுவதால், மனுதார்கள் தகுந்த செலவுத்தொகை செலுத்தும்பட்சம் மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

12. இறுதியாக, மனுதார்கள் இம்மனுவின் செலவுத்தொகையாக ரூ.2,000/-ஐ வருகிற 14.07.2022 தேதிக்குள் திருநெல்வேலி மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவில் செலுத்தும்பட்சம் இம்மனு அனுமதிக்கப்படும், தவறும் பட்சம் இம்மனு தானாக தள்ளுபடியாகி நிற்கும். மீண்டும் அழைக்க வாய்தா 15.07.2022.

என்னால் சுருக்கெழுத்தருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று **2022ம் ஆண்டு ஜுன் திங்கள் 29ல்** அவையறியப் பகரப்பட்டது.

S CHANDRA SEKAR
Digitally signed by S CHANDRA SEKAR
Date: 2022.06.29 17:53:52 +0530

சார்பு நீதிபதி,
சங்கரன்கோவில்.

| | |
|---|---|
| மனுதார் தரப்பு சாட்சிகள்: | இல்லை |
| மனுதார் தரப்பு சான்றாவணங்கள்: | இல்லை |
| எதிர்மனுதார் தரப்பு சாட்சிகள்: | இல்லை |
| எதிர்மனுதார் தரப்பு சான்றாவணங்கள்: | இல்லை |

S CHANDRA SEKAR
Digitally signed by S CHANDRA SEKAR
Date: 2022.06.29 17:53:59 +0530

சார்பு நீதிபதி,
சங்கரன்கோவில்.

**சார்பு நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**இடைநிலை மனு எண்.1/2022**
**இன்**
**அசல் வழக்கு எண்.107/2017**

**உத்தரவு (அசல்/வரைவு)**

**நாள்: 29.06.2022**